| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | மாவட்டம் : | தேனி | காலம் : | 04/05/2024 | முதல் | 8/05/2024 |
| | அறிக்கை எண் : | 036/ 2024 | வெளியீட்டு நாள் : | | 03/05/2024 | |

### தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 40°-41° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27°-29° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (28.04.2024 முதல் 02.05.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 08-05-22024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 28/04 | 29/04 | 30/04 | 01/05 | 02/05 | தேதி | நாள்-1 04/05 | நாள்-2 052/05 | நாள்-3 06/05 | நாள்-4 7/05 | நாள்-5 08/05 |
| 0.0 | 0.0 | 0.8 | 1.7 | 0.0 | மழை (மி.மீ) | 2 | 3 | 4 | 3 | 5 |
| 39 | 40 | 40 | 41 | 41 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 36 | 36 | 35 | 35 | 36 |
| 27 | 28 | 29 | 27 | 29 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 24 | 24 | 24 | 23 |
| 5 | 4 | 4 | 3 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 4 | 5 | 7 |
| 69 | 72 | 64 | 63 | 60 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 80 | 70 |
| 46 | 57 | 52 | 41 | 34 | | 20 | 30 | 20 | 30 | 30 |
| 11 | 7 | 8 | 7 | 8 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 8 | 8 | 8 | 4 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தெற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

### குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 35°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 23° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 4 முதல் 8 கி.மீ வேகத்தில், மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

தமிழகத்தின் ஓரிரு இடங்களில் மே 4ம் தேதி முதல் 8 தேதி வரை இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு. மேலும், மணிக்கு 30 முதல் 40 கி.மீ வேகத்தில் தரைக் காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால், விவசாயிகள் வாழை மரங்களுக்கு முட்டு கொடுத்தல், பப்பாளி, கொய்யா, முருங்கை பயிர்களுக்கு மண் அனைத்தல், கரும்பு பயிருக்கு விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். கொடி வகை பயிர்பந்தல்களில் துரு பிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமல், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

### எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

**மக்காச்சோளம்:**

மக்காச்சோள மேக்சிம் பூஸ்டரினை மக்காச்சோள பயிருக்கு ஏக்கருக்கு 3 கிலோ என 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஆண் மஞ்சரி மற்றும் மணி உருவாகும் பருவத்தில் தெளிக்கவும். கூடுதலாக ஒட்டும் திரவம் சேர்த்து கொள்ளவும்.

இதனால் மணி பிடிக்கும் திறன் அதிகரிக்கும், விளைச்சல் 20 சதம் வரை அதிகரிக்கும் மற்றும் வறட்சியை தாங்கி வளரும் தன்மையும் மேம்படும்.

**வாழை:**

வாழையில் மகசூலை அதிகரிக்க லிட்டருக்கு 20 கிராம் என்ற அளவில் வாழை பூஸ்டர் (பனானா சக்தி) உடன் எலுமிச்சைசாறு கலந்து தெளிக்கவும்.

வாழை நடவு செய்த 3, 5 மற்றும் 7ம் மாதங்களில் இலை வழி தெளிப்பாக தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**

கோடை காலத்தில் முட்டை கோழிகளுக்கு இடவசதி 2 ½ அடி வரை அதிகரிக்க வேண்டும்.

குளிர்ச்சியான சுத்தமான தண்ணீரை 5 முதல் 6 முறை வரை கொடுக்க வேண்டும்.

தீவனத்தட்டு, தண்ணீர் தட்டு போன்றவற்றை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

கோழிகள் நெருக்கடி இன்றி சுற்றித்திரிய இடவசதி ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

வெப்பத்தால் முட்டையின் மேல் ஓடு மெலிந்து காணப்பட்டால், வைட்டமின் டி, கிளிஞ்சல்தூள் போன்றவற்றை தீவனத்துடன் சேர்த்து கொடுக்க வேண்டும்.

இவ்வாறு கோடை வெப்பத்தில் இருந்து கோழிகளைப் பாதுகாப்பதன் மூலம் அவற்றின் இறப்பை தடுத்து நஷ்டம் ஏற்படுத்துவதை தவிர்க்கலாம்.

.